

பாடம் 3

ஏப்ரல் 13 - 19

# மாற்றத்திற்கு ஆயத்தம்செய்தல்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *1கொரிந்தியர் 10:1-13; ஆதியாகமம் 2:24; 1கொரிந்தியர் 13:4-8; 1சாமுவேல் 1:27; சங்கீதம் 71; 1கொரிந்தியர் 15:24-26.*

**மனன வசனம்:** நீதி அவருக்கு முன்னாகச் சென்று, அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும். சங்கீதம் 85:13

வாழ்க்கையில் மாற்றங்கள் நிறையவே இருக்கின்றன. மாற்றம் நடக்கும் என்பது மாத்திரம்தான் மாறாது இருக்கிறது. மாற்றம் என்பது நம் வாழ்க்கையின் ஒரு பகுதி. மாற்றங்கள்தாம் வாழ்க்கையின் அடிப்படை என்று இயற்பியல் விதிகளும் சொல்லுகின்றன.

பெரும்பாலும், மாற்றங்கள் எதிர்பாராமல் வருகின்றன. திடீரென்று, உடனடியாக, எல்லாம் மாறும்போது, நாம் மாட்டிக்கொள்வோம்.

ஆனாலும் சில சமயங்களில் மாற்றம் வருவதை நாம் பார்க்க முடியும். நமக்கு எச்சரிப்புகள் கிடைக்கும். ஏதோ வித்தியாசமாக நடக்கப் போகிறது என்ற உணர்வோம். அப்போது அதற்கான ஆயத்தத்தைச் செய்யவேண்டும். திருமணம், குழந்தைகள், முதிர்வயதாகுதல், மரணம் போன்ற மாற்றங்களுக்கு நாம் ஆயத்தம்செய்ய வேண்டும்.

ஆமாம், நாம் தனிமையில் வாழவில்லை. நமக்கு வரும் மாற்றங்கள் நம் குடும்பத்தைப் பாதிக்கும். நம் குடும்பத்தில் ஏற்படுகிற மாற்றங்கள் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரையும் பாதிக்கலாம்.

ஏதோ ஒரு வழியில், வாழ்வின் ஒரு சமயத்தில் நாம் சந்திக்கிற மாற்றங்கள் எவ்வாறு நம் குடும்பத்தைப் பாதிக்கமுடியும் என்பதைக் குறித்து இந்த வாரத்தில் படிக்கப்போகிறோம்.

*2019, ஏப்ரல் 20 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**ஞாயிறு** ஏப்ரல் 14

# ஆயத்தம் இல்லாத நிலை

மனித வாழ்வின் நிஜங்களை வேதாகமம் மூடி மறைப்பதில்லை. வலியும் வேதனையும் எவ்வளவு கொடியதாக இருந்தாலும், அவற்றை வேதாகமம் அப்படியே பேசுகிறது. வேதாகமத்தின் முதல் சில பக்கங்களைத் தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் மனித இனத்தின் வேதனைகளைத்தாம் பார்க்கிறோம். 'எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்கள் ஆனோம்' என்று பவுல் சொல்வது உண்மைதான். ரோமர் 3:23.

**கேள்வி: 1 கொரிந்தியர் 10: 1-13 இல், என்ன எச்சரிக்கைகள் உள்ளன? என்ன வாக்குறுதிகள் உள்ளன?**

________________________________________

________________________________________

மாற்றங்கள் நடக்கும்போது நாம் காட்டுகிற எதிர்வினைதான் நம்முடைய செயல்களாக இருக்கின்றன. வருகிற மாற்றங்களை நாம் விசுவாசத்தோடு தேவனை நம்பி, சந்திக்கவேண்டும். கீழ்ப்படியாமல் இருக்க சோதனைகள் எப்படி வந்தாலும், நம் விசுவாசத்தை கீழ்ப்படிதல்மூலம் வெளிப்படுத்தவேண்டும்.

"விற்கப்படவும் வாங்கப்படவும் முடியாத மனிதர்கள்; தங்கள் உள்ளத்தில் உண்மையுடன் இருப்பவர்கள்; பாவத்தைப் பாவம் என்று பயமில்லாமல் சுட்டிக்காட்டக் கூடியவர்கள்; காந்த ஊசியின் முனை எப்போதும் துருவத்தைச் சுட்டிக்காட்டுவது போல, தங்கள் மனசாட்சியில் கடமை பக்கமாகவே எப்போதும் திரும்பியிருக்கிறவர்கள்; உச்சி மீது வானம் இடிந்து விழுந்தாலும், உண்மைக்காக உறுதியாய் நிற்பவர்கள் - இப்படிப்பட்ட மனிதர்கள்தாம் இன்றைய உலகத்தின் மிகப் பெரிய தேவை."

**கேள்வி: தங்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் வந்தபோது, பின்வரும் வசனங்களிலுள்ள மக்கள் என்ன தவறு செய்தார்கள்? அவர்களுடைய தவறுகளிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?**

**அப் 5:1-10** ______________________________

**ஆதி 16:1,2,5,6** ______________________________

**மத் 20:20-22** ______________________________

மாற்றங்கள் வரும்போது, அவற்றோடு சோதனைகள் வரலாம், சவால்கள் வரலாம், சில சமயங்களில் பயம் ஏற்படலாம். அவற்றைச் சரியான முறையில் சந்திப்பதற்கு ஆவிக்குரிய ஆயுதங்களைத் தரித்திருப்பது எவ்வளவு முக்கியம்!

மாற்றங்கள் எதிர்பாராதவையாக இருந்தாலும், பார்க்கக்கூடியவை பார்க்கக்கூடாதவை என்று எதுவாக இருந்தாலும், அவற்றைச் சந்திப்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

# திருமணத்திற்குத் தயாராகுதல்

ஒருநபர் திருமணம் செய்யும்போது, அவர் பெரிய மாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

எல்லோரும் திருமணம் செய்யப்போவதில்லை. நம் முன்மாதிரியான இயேசு திருமணம் செய்துகொள்ளவில்லை. திருமணமாகாத வேறே வேத நபர்களும் இருக்கிறார்கள்.

ஆனாலும், பலர் திருமணம் செய்துகொள்கிறார்கள். எனவே, மணவாழ்க்கைபற்றி வேதாகமம் பேசாமல் இல்லை. ஒருவருடைய வாழ்க்கையை மாற்றுவதில் திருமணத்திற்குப் பெரும் பங்குண்டு.

திருமணம்தான் வேதாகமம் சொல்கிற முதல் சமுதாய ஏற்பாடு. திருமணத்தைப்பற்றி, ஆதாம் ஏவாளிடம் தேவன் சொன்ன அந்த வார்த்தைகள் வேதாகமத்தில் மூன்று இடங்களில் காணப்படுகின்றன. 'ஆகையால் ஒருவன் தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.' ஆதி 2:24; மாற்கு 10:7; எபே 5:31. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே இருக்கிற உறவைவிட, கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான உறவு முக்கியமானது என்று இந்த வசனங்கள் சொல்கின்றன. இயேசுவுக்கும் மணவாட்டியாகிய திருச்சபைக்கும் இடையேயான உறவுக்கு கணவன் மனைவி உறவு ஓர் அடையாளமாகும். எபே 5:32.

ஒரு வீட்டைக்கட்டும்போது, அதன் செலவைக் கணக்கிடவேண்டியது அவசியம். அப்படியானால், ஒரு குடும்பத்தை உருவாக்கும்போது, எவ்வளவு அதிகமாகக் கணக்குப் பார்க்கவேண்டும்! செங்கல், சாந்து, மரம், இரும்பு, கண்ணாடி, மின்கம்பிகள் போன்ற வற்றால் வீட்டைக் கட்டுகிறோம். ஆனால், குடும்பத்தைக் கட்டுதல் வித்தியாசமான ஒரு செயல்.

**கேள்வி: வாழ்க்கையின் முக்கியமான சில குணலட்சணங்கள் திருமணவாழ்க்கைக்கு மிகமுக்கியமானவையாகும். அவை யாவை? 1கொரி 13:4-8; கலா 5:22,23.**

திருமணத்திற்கான ஆயத்தத்தை தனிப்பட்ட முறையில் அவரவர் செய்ய வேண்டும் . அதே சமயத்தில், நம்முடைய வாழ்க்கை துணை நமக்கு எவ்வளவு தூரம் உதவியாக இருக்கமுடியும் என்பதையும் பார்க்க வேண்டும். அவர் கடினஉழைப்பாளியா? நீதி 24:30-34. முன்கோபியா? நீதி 22:24. ஒரே விதமான நம்பிக்கை உண்டா? 2கொரி 6:14,15. என் எதிர்கால துணையைப்பற்றி என் குடும்பமும் நண்பர்களும் எப்படி நினைக்கிறார்கள்? நீதி 11:14. நான் விசுவாசிக்கிறேனா, அல்லது எனது உணர்வுகளை நம்புறேனா? நீதி 3:5,6. இந்த கேள்விகளுக்கான பதில்கள்தான் நாம் அனுபவிக்கப்போவது மகிழ்ச்சியா வேதனையா என்பதை வெளிப்படுத்துகின்றன.

சில நல்ல குடும்பங்கள்பற்றி யோசியுங்கள். அங்கே என்ன நியதிகள் காணப்படுகின்றன? மற்ற உறவுகளில் அந்த நெறிகளை எவ்வாறு பயன்படுத்தலாம்?

# பிள்ளை வளர்க்க ஆயத்தமாகுதல்

குழந்தை பிறப்பு குடும்பத்தில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வருகிறது. குழந்தை பிறந்தபிறகு, குடும்பம் முன்போல் இருக்கமுடியாது.

'வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்.' சங்கீதம் 127:5,6.

அதேசமயத்தில், குழந்தை பிறக்கும்போது, 'அந்தக் குழந்தையின் தேவைகளை எப்படிக் கவனிக்கவேண்டும்?' என்று சொல்கிற பயனீட்டாளர் கையேடு எதையும் அந்தக் குழந்தை கொண்டுவருவதில்லை. அனுபவம்பெற்ற பெற்றோர்கள்கூட தங்கள் பிள்ளைகளின் செயல்களையும் சொற்களையும் பார்த்து அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

திருமணத்திற்கு ஆயத்தம்செய்வது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது குழந்தை பேற்றுக்கு ஆயத்தமாவதும் ஆகும்.

**கேள்வி: பிறப்பு பற்றிய பின்வரும் சம்பவங்கள் தனித்தன்மை வாய்ந்தவைதாம். ஆனாலும் பிள்ளை வளர்ப்பதற்கு இவற்றிலிருந்து என்ன நியதிகளை பெற்றோர்கள் கற்றுக்கொள்ளலாம்? 1 சாமு 1:27; நியா 13: 7; லூக்கா 1:6,13-17, 39-55,76-79.**

---

இந்தப் பெற்றோருக்கு இருந்த பொறுப்பும் வாய்ப்பும் எவ்வளவு பெரியவை! மூன்று பெற்றோரும் இஸ்ரவேலில் தீர்க்கதரிசிகளாகவும் தலைவர்களாகவும் ஆகயிருந்தவர்களைப் பெற்றெடுத்தவர்கள். ஒரு குழந்தை தன் ரட்சகரான இயேசுவுக்கு கட்டியக்காரனாக வேலைசெய்ய இருந்தார். இன்னொரு குழந்தை மேசியாவாக ஆகவிருந்தார்.

நம்முடைய குழந்தைகள் வேதாகம தீர்க்கதரிசிகளாகப் போவதில்லை என்பது உண்மைதான். ஆனால், அவர்களையும் முக்கியமான மாற்றத்திற்கு நாம் ஆயத்தமாக்கவேண்டும்.

''குழந்தையின் பிறப்புக்கு முன்பே, தீமைக்கு எதிராக வெற்றிகரமாக எதிர்த்துப் போராடுவதை ஆரம்பிக்க வேண்டும்.

குழந்தையின் பிறப்புக்கு முன்னால், ஒரு தாய் சுயநலமுள்ளவளாகவும், கடினமானவளாகவும், பொறுமையில்லாதவளாகவும் இருந்தால், குழந்தையிடமும் அந்தத் தன்மைகள் காணப்படும். தீமை செய்வதற்கான தன்மையை அநேக பிள்ளைகள் தங்கள் பிறப்புரிமையாகப் பெற்றுக்கொள்கிறார்கள்.'' - *EGW, AH, p 256.*

---

நம் குழந்தைகளைக் கவனிப்பதாக இருந்தாலும், வேறே மனிதர்களுக்கான பொறுப்புகளை நிறைவேற்றுவதாக இருந்தாலும், தேவனுக்குப் பிரியமான வகையில் நம் பொறுப்புகளை நிறைவேற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

---

# முதுமைக்கு ஆயத்தமாகுதல்

'எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்து போகிறோம்.' சங் 90:10. காலம் நம்மில் ஏற்படுத்துகிற மாற்றங்களைப் பற்றி மோசேயின் இந்த வார்த்தைகள் பேசுகின்றன. நம் உடலில் பல மாற்றங்களை நாம் பார்க்கிறோம். முடியின் நிறம் மாறுகிறது. வேகம் குறைகிறது. வலிகள் நம் வாழ்க்கையின் ஒரு பகுதி ஆகின்றன. நம்முடைய பிள்ளைகளுக்குத் திருமணம் ஆகும்போது, நமக்குப் பேரப்பிள்ளைகள் கிடைக்கிறார்கள். அவர்களோடு நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியும். வாழ்க்கையின் முன்பருவங்கள் அதன் பின்பருவங்களுக்கு நம்மை ஆயத்தம் செய்கின்றன.

**கேள்வி: முதுமைக்கு ஆயத்தமாவதுபற்றி மாத்திரம் அல்ல, பொதுவாக வாழ்க்கைபற்றி சங்கீதம் 71 என்ன சொல்கின்றது?**

வாழ்க்கையின்சவால்களைச்சந்திக்கிறஒருமுதியவரைப்பற்றியது சங்கீதம் 71. வாழ்நாள்முழுவதும் தன் தேவனை நம்பி இருந்ததால், அவர்இப்போதும்மகிழ்ச்சியோடுஇருக்கிறார். சிறுவயதிலேயே தேவன் மேல் நம்பிக்கை வைத்தால், முதிர்வயதிலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். வாழ்க்கையின் பருவங்களை அவர் கடந்து வந்தபோது, மூன்று முக்கியமான பாடங்களை அவர் கற்றுக்கொண்டதாகச் சொல்கிறார்.

1. **தேவனோடு நெருங்கிய அனுபவ அறிவை உடையவர்களாய் இருங்கள். சங்கீதம் 71:17.** தேவனே அவருடைய அடைக்கலம். சங்கீதம் 71:1,7. தேவனே அவருடைய இரட்சகர். சங்கீதம் 71:2. தேவனே அவருடைய கன்மலையும் கோட்டையும். சங்கீதம் 71:3. தேவனே அவருடைய நம்பிக்கையும் உறுதியும். சங்கீதம் 71:5. தேவனே அவருடைய வல்லமையும் பெலனும். சங்கீதம் 71:16,17. 'தேவனே உமக்கு நிகரானவர் யார்?' எனும் கேள்வியை எழுப்புகிறார். நாம் தினமும் வேதாகமத்தை வாசித்து, அவர் செய்பவற்றை யோசித்து, அவரோடு பேசி வந்தால், அவரோடு நமக்குள்ள அனுபவம் வளரும்.
2. **நல்ல பழக்கங்களை உருவாக்குங்கள்.** நல்ல ஊட்டச்சத்து, உடற்பயிற்சி, தண்ணீர், சூரிய ஒளி, ஓய்வு முதலியன இனிய, நீண்டகால வாழ்க்கையை அனுபவிக்க உதவுகின்றன. சங்கீதக்காரன் நல்ல பழக்கவழக்கங்களான பாதுகாப்பு (சங்கீதம் 71: 3), துதி (சங்கீதம் 71:6), நம்பிக்கை (சங்கீதம் 71:14) பற்றி எவ்வாறு குறிப்பிடுகிறார் என்பதைக் கவனியுங்கள்.
3. **தேவ ஊழியத்திற்கான ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.** வயது முதிர்ந்தபிறகு, தாம் சும்மா இருக்கப் போவதாக அவர் சொல்லவில்லை. வயது முதிர்ந்தபிறகும் தேவனைத் துதித்து, அவரைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல அவர் ஆசைப்படுகிறார். சங் 71:8,15-18.

முதிர் வயதாவதின் நன்மைகள் என்ன? உங்கள் இளவயதில் தெரியாதிருந்து, இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கிற நன்மையானவைகள் என்ன?

# இறப்புக்கு ஆயத்தமாகுதல்

நாம் இரண்டாம் வருகையில் உயிரோடு இல்லை என்றால், மிகப் பெரிய மாற்றம் ஒன்று நமக்கு ஏற்பட்டிருக்கும்; அதுதான் மரணம். திருமணம், பிறப்பு போன்று நம் குடும்பத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவது மரணம் ஆகும்.

**கேள்வி: 1கொரிந்தியர் 15: 24-26 இல், மரணத்தைக் குறித்து நமக்கு என்ன பார்க்கிறோம்?**

---

பல சமயங்களில் எதிர்பாராத நேரத்தில் மரணம் வந்து விடுகிறது. குழந்தைகள் கூட சில சமயங்களில் நிரந்தரமாக தங்கள் கண்களை மூடி விடுகிறார்கள். காலையில் விழிக்கும் போது நம்மோடு இருக்கிற குடும்பத்தார் மாலையில் மரித்துவிடுகிறார்கள்.

மரணம் எப்போது நேரிடும் என்பது நமக்குத் தெரியாது. அதனால், நாம் எப்போதும் தேவனோடு விசுவாசத்தால் தொடர்புடையவர்களாக வாழவேண்டும்; ஒவ்வொரு நிமிடமும் அவருடைய நீதியால் மூடப்பட்டிருக்கவேண்டும்; இதுதான் மரணத்தைச் சந்திப்பதற்கு நாம் செய்யக்கூடிய சரியான ஆயத்தமாகும்.

சில மாதங்கள்தான் நீங்கள் உயிரோடு இருப்பீர்கள் என்று அறிந்திருந்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்? மரணம் நம்மை எப்போதும் மேற்கொள்ளும் என்று நமக்குத் தெரியாது. ஆனால், முதிர்வயதாகும் போது, நாம் மரணத்தை நெருங்குகிறோம் என்பது தெரியும். அதனால், நம்மையும் நம் குடும்பத்தையும் மரணத்திற்கு ஆயத்தம்செய்வது எவ்வளவு முக்கியமானது!

**கேள்வி: தன் வாழ்வின் இறுதியில் தன் குமாரனாகிய சாலொமோனிடம் தாவீது பேசிய வார்த்தைகளை 1 இராஜாக்கள் 2: 1-4 இல் பார்க்கலாம். மரணத்திற்கு நம்மையும் நம் வீட்டாரையும் ஆயத்தம்செய்வது பற்றின என்ன பாடங்களை இப்பகுதியில் கற்றுக்கொள்ளலாம்?**

---

உரியாவின் மனைவியை கர்ப்பமாக்கி, அவள் கணவனைக் கொலைசெய்த தாவீது, தன் மகனிடம் கர்த்தருடைய வழியில் நட என்று சொல்வதா? இது கொஞ்சம் அதிகம் என்று வாதிடலாம். ஆனால், தாவீது அந்தப் பாவத்தைச் செய்து, அதன் விளைவுகளையும் அனுபவித்ததால், அவருடைய வார்த்தைகள் முக்கியமானவை. தனக்கு வேதனையை தந்த அனுபவங்களில் தான் கற்றுக்கொண்ட பாடத்தை தன் பிள்ளைக்கு எச்சரிக்கையாகக் கொடுக்கிறார். பாவத்தின் விளைவை கடினமான விதத்தில் தாவீது கற்றுக்கொண்டார்.

அந்தக் கஷ்டத்தை தன் மகன் அனுபவிக்கவேண்டாம் என்று தாவீது இந்த ஆலோசனையைச் சொல்லுகிறாரா?

# வெள்ளி ஏப்ரல் 19

## மேலும் படிக்க:

வனாந்தரத்தில் இஸ்ரவேலரை வழிநடத்தி வந்தபோது தேவனுடைய அன்பையும் வல்லமையையும் அவர்கள் கண்டிருந்தாலும், பெரிய மாற்றங்களின் சமயங்களில் அவர்கள் தவறுக்கு மேல் தவறு செய்துகொண்டே இருந்தார்கள். அந்தச் சமயத்தில் இஸ்ரவேலரிடம் மோசே இவ்வாறு சொன்னார்: பாகால்பேயோரின் நிமித்தம் கர்த்தர் செய்ததை உங்கள் கண்கள் கண்டிருக்கிறது; “பாகால்பேயோரைப் பின்பற்றின மனிதரையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இராதபடிக்கு அழித்துப் போட்டார். ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்ட நீங்களெல்லாரும் இந்நாள்வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள். நீங்கள் கைக்கொள்ளும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? கர்த்தர் என்னை நோக்கி, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள் என்று சொன்னார்.” உபா **4:3–9.** கர்த்தர் நமக்குச் செய்ததை மறவாமல் இருப்பது எவ்வளவு முக்கியம்! நமக்குப் பின்வருகிறவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்போது, அதை நாம் மறக்காமல் இருப்போம். இதில் குடும்பம் எவ்வளவு முக்கியமான இடத்தை எடுத்துக்கொள்கிறது! பேயோரில் அந்த மக்கள் செய்த பாவமானது குடும்ப வாழ்க்கைக்குக் கேடானது. “காமவெறி குற்றத்தால் இஸ்ரவேலர் தேவனுடைய தண்டனைகளைப் பெற்றார்கள். ஆத்துமாக்களை பெண்கள் தங்கள் கண்ணிகளால் பிடிக்கிற வழக்கம் பாகால்பேயோரோடு முடிந்துவிடவில்லை.” — *EGW, AH, p 326.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *திருமணம், குழந்தை வளர்ப்பு, முதுமை அடைதல் போன்ற வாழ்வின் மாற்றங்களில் நீங்கள் செய்த ஆயத்தம்குறித்து வகுப்பில் பேசுங்கள். இந்த மாற்றங்கள் உங்கள் குடும்பத்தை எவ்வாறு பாதித்தன? அதே பிரச்சினையை சந்திக்கக்கூடிய மற்றவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவிசெய்யமுடியும்?*

2 *சாலொமோனிடம் தாவீது சொன்ன வார்த்தைகளை யோசித்துப்பாருங்கள். பத்சேபாளோடு தாவீது செய்த பாவத்தால், அதற்குப்பிறகு அவருடைய ஆளுகையில் அவரும் அவருடைய குடும்பமும் பாதிக்கப்பட்டார்கள். ஆனாலும், அவற்றின்மத்தியிலும் தேவனுடைய கிருபை செயல்பட்டது எவ்வாறு?*

# குழந்தைக்காக ஜெபித்தல்

**மர்ஜோரி சிஸோங்கா**

எங்களுக்கு திருமணமாகி ஒரு வருடம் கழித்து மகன் பிறந்தான். அதன்பிறகு நான் கர்ப்பந்தரிக்கவே இல்லை.

“அடுத்து உனக்கு குழந்தை இல்லையா? மருத்துவரைப் பார்” என்று எல்லாரும் சொல்ல ஆரம்பித்தார்கள். சூனியக்காரர்களிடம் செல்லுமாறும் சிலர் சொன்னார்கள்.

நானும் என் கணவரும் அதிக குழந்தைகளைப் பெற ஆசைப்பட்டோம். அவர் சாம் பியாவில் மான்செ எனும் இடத்தில் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் பள்ளியான ருசாங்கு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்தார்.

ஒரு பிள்ளைதானா என்று கேட்கிறவர்களுக்கு நான் என்ன சொல்ல முடியும்?

ஒவ்வொரு முறையும் “தேவன் பார்த்துக்கொள்வார்” என்றே பதில் சொன்னேன்.

எல்லாரும் கேட்கிறார்கள் என்பதற்காக நான் கவலைப்படவில்லை. ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக நான் தண்டிக்கப்படுகிறேன் என்று மூடநம்பிக்கையுடைய என் நணபர்கள் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

பிறகு என் கணவரின் சகோதரி மரித்துப்போனார். அவருடைய மூன்று வயது மகளைத் தத்தெடுத்தோம். எனவே பிள்ளைகளின் எண்ணிக்கை இரண்டானது. பெண் குழந்தை வந்துவிட்டதால், அது என் உடலில் ஹார்மோன்களை ஊறச்செய்து, இன் னொரு குழந்தை பெறுவதற்கு உதவும் என்று என் நண்பர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

ஆனாலும் குழந்தை பிறக்கவில்லை. வேதாகமத்தில் அன்னாளின் சம்பவம் எனக்கு ஆறுதலாக இருந்தது. நானும் என் கணவரும் ஜெபித்தோம். 13 வருடங்களாக ஜெபித்து வந்தோம். நான் கர்ப்பந்தரித்தேன்! உடனே நானும் என் கணவரும் முழங்கால் படியிட்டு, தேவனுக்கு நன்றி சொன்னோம்.

எங்களுடைய இரண்டாவது குழந்தைக்கு ‘சீலெலா’ என்று பெயரிட்டோம். டோங்கோ மொழியில் அதற்கு ‘பாத்திரவான்’ என்று அர்த்தம். அடுத்ததாக மூன்றாவது ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் சகோன்டெலா; அதற்கு ‘அப்படியே ஆகட்டும்’ என்று அர்த்தம். இப்போது என் கடைசி இரண்டு மகன்களுக்கும் முறையே 17, 14 வயதாகின்றன.

விசுவாசத்தோடு நாம் தேவனிடம் கேட்கும்போது, நாம் விரும்புவதிற்கும் அதிக மாக அவர் செய்கிறார்.



52 வயதாகும் மர்ஜோரி சிசோங்கா, ருசாங்கு அட் வென்ட்டிஸ்ட் பள்ளியில் பொருளாதார ஆசிரியராக இருக்கிறார்.

**இப்போது சாம்பியா என்று அழைக்கப்படும் வட ரோடேசியாவில் அமெரிக்க மிஷனரியான வில்லலியம் ஹேரிஸன் 1903ல் ஊழியம் செய்தார்.**